بسم الله الرحمن الرحيم

# DUAH REVEALED TO THE KHALIFATHULLAH

## Hazrat Munir A. Azim (A)

**(Thursday 16 March 2017) at 4.35 p.m**



இந்நூற்றாண்டின் இறைத்தூதர் ஹஸ்ரத் கலீ.ீபத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்கள், எல்லாம் வல்ல அல்லாஹ்விடமிருந்து பிரஞ்ச் மொழியில் வெளிப்பாடாக பெற்ற துவாவினுடையவும் அதை போன்றே கிரயோள் மொழியில் பெற்ற வெளிப்பாடுனுடையவும் தமிழாக்கம்.

## Revealed Duah & Message

***"Allahoumma ayyad Khalifathullah, Amirool-Mominina (Munir Ahmad Azim), bi Nasreen Aziza wa bi Rouhil-Qouddous wa'ah fizhou minal balaya. Ameen."***

"O my Lord! Support Your Khalifathullah, the Commander (Chef) of Believers, with a Mighty Help and with the Holy Spirit. And help him against tribulations. Ameen". (Originally received in French)

**(Received on 16 March 2017 from 4.10 to 4.35 p.m)**

**"எங்கள் இறைவா! உன் வல்லமையின் உதவியைக் கொண்டும் பரிசுத்த ஆவியைக் கொண்டும் கலீ.:.பத்துல்லாஹ்வுக்கு ஆற்றல் வழங்குவாயாக! அமீறுல் மூம்மினீனுக்கு (முனீர் அஹமது அஸீம்) உதவி புரிவாயாக! அனைத்து விதமான துன்பங்களிலிருந்தும் அன்னாரை பாதுகாத்துக் கொள்வாயாக! ஆமீன்"**

(2017 மார்ச் மாதம் 16-ம் தேதி 4.10 pm ற்கும் 4.35 pm ற்கும் மத்தியில் பிரெஞ்ச் மொழியில் கிடைத்த வெளிப்பாடு)

என் ரப்பு(இறைவன்) இந்த அற்புதம் வாய்ந்த துவாவை எனக்கு வெளிப்பாடாக வழங்கியிருக்கின்றான். அடிப்படையற்ற பேச்சுவார்த்தையும் பொறாமையும் பகைமையும் வெறுப்பும் எங்கும் தென்பட்டிருக்கின்றது. இவ்விஷயத்தைக் குறித்து ஏராளமான பிரசங்கங்கள் வழியாக அனைத்து நம்பிக்கையாளர்களையும் நான் உணரச் செய்திருந்தேன். அதாவது நீங்கள் அமைதியாக வாழ்ந்துக் கொள்ள வேண்டும், அமைதியை பரவச் செய்ய வேண்டும், பிரச்சனைகளை உண்டு செய்யாமல் இருக்க வேண்டும் அல்லாஹ்வின் கலீ.:.பாவுக்கு நீங்கள் கவலையிழைக்காமல் இருக்க வேண்டும், (என்றெல்லாம்). ஆனால் இப்பொழுது நடைபெறுவதை அல்லாஹ் சற்றும் விரும்பிக்கொள்வதில்லை. இதைக் குறித்த ஒரு செய்தியை (2017 மார்ச் 16-ம் தேதி Time 4.10-ற்கும் 4.25 –ற்கும் மத்தியில்) அல்லாஹ் எனக்கு வழங்கியுள்ளான்.

*"Those people who are not showing any respect for the Caliph of Allah and they are troubling him when he has a lot of works to do. Instead of helping him, whereby you also shall receive your reward with Allah as well as the pleasure of Allah upon you, but instead of all this, you are inviting the wrath of Allah upon you. (Beware) lest Allah curse you and remove you from the ark (ship/ boat) of the Divine Manifestation. Do not look at what others are*

*doing, do not be jealous of them. Leave them and let them live their lives and take responsibility of what they do. Take into account all that which you are doing, through your deeds, and (ponder over) if Allah is pleased with you or not, or is it that you are attracting the wrath of Allah upon you through your deeds when you are troubling the Khalifatullah, Allah's Caliph. The privacy of a person concerns that person only, and you need not poke your nose in his (and/ or her) private life.”* (Revelation originally received in Creole).

“அல்லாஹ்வின் கலீ..பாவுக்கு கட்டுப்படாமலிருப்பவர் எவரோ அவர், அன்னாரை கவலைக்காளாக்கி கொள்கின்றார். ஆனால் அன்னாருக்கு ஏராளமான வேலைகளை செய்து முடிப்பதற்குண்டு. அன்னாருக்கு உதவி செய்வதற்கு பதிலாக (கவலை விளைவிக்கின்றீர்கள்). அவ்வாறு உதவி புரிந்தால் உங்களுக்கும் நீங்கள் செய்யும் செயல்களுக்கும் பிரதிபலன் உண்டு. மட்டுமின்றி உங்களுக்கு அல்லாஹ்வின் திருப்தியும் கிடைத்துவிடும். விஷயங்கள் இவ்வாறு இருப்பினும் நீங்கள் அல்லாஹ்வின் கோபத்தை உங்கள் மீது சுயம் அழைத்துக் கொள்கின்றீர்கள். அல்லாஹ் உங்களை சபித்துக் கொள்ளாமலிருப்பதற்கும் இறையடையாளத்தின் படகிலிருந்து உங்களை வெளியேற்றிக் கொள்ளாமலிருப்பதற்குமாக நீங்கள் ஜாகிரதையுடனிருங்கள். பிறரின் செயல்களின்பால் நீங்கள் பார்வையிடாதீர்கள். அவர்களின் மீது நீங்கள் பொறாமை வைத்துக் கொள்ளாதீர்கள். அவர்களை விட்டு விடுங்கள். அவர்கள் அவர்களின் வாழ்க்கையுமாக முன் செல்லட்டும்.

அவர்களின் செயல்களுக்கான பொறுப்பை அவர்கள் ஏற்றெடுத்திடட்டும். உங்களின் செயல்களுக்கான பதில் (கணக்கு போதித்தல்) நீங்கள் கூறிக் கொள்ளுங்கள். (மிக ஆழமாக சிந்தியுங்கள்) உங்கள் மீது அல்லாஹ் திருப்தியுடையவனாகயிருக்கின்றானா? அல்லது இல்லையா? உங்களின் செயல்கள் மூலம் அல்லாஹ்வின் கலீ.ஃ.பாவை கவலைக்கு ஆளாக்கி கொள்வதன் வாயிலாக அல்லாஹ்வின் கோபத்தை நீங்கள் ஈர்த்துக் கொள்ளவா செய்கின்றீர்கள்? ஒரு நபரின் தனிப்பட்ட முறையிலான வாழ்க்கை என்பது அவருடையது மட்டுமாகும். அவரது அல்லது அவளது தனிப்பட்ட முறையிலான வாழ்க்கையில் நீங்கள் ஈடுபட வேண்டாம்". (இந்த இறை வெளிப்பாடு கிரயோள் மொழியில் கிடைத்தது).


**Issued by:**
Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**
Azim Ahmad
**E-mail:** azimahmad070@gmail.com
Cell: 9789180817